முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 06.02.2026.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

**அசல் வழக்கு எண். 57/2024**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நீலகண்டன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | நரசிம்மன் | வயது | : | 38 |
| ஊர் | : | விண்ணவாடி | தொழில் | : | கூலி |

**வா.சா. 2 (நீலகண்டன்): வாதி தரப்பில் இரண்டாம் சாட்சியின் குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு சொத்து என் தாத்தா நடராஜன் என்பவரின் சொத்தாகும். நரசிம்மன் பெருமாள்சாமி, சீதாராமன் ஆகியோர்கள் நடராஜனின் வாரிசுகள் ஆவார்கள். நரசிம்மனின் வாரிசுகள்தான் நானும், 5ம் பிரதிவாதி கந்தசாமி ஆகும். பெருமாள்சாமியின் தந்தை பெயர் நடராஜன் ஆகும். வழக்கு தாக்கல் செய்திருக்கும் சொத்தின் முழு விவரம் பற்றி எனக்கு தெரியும். மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் என் சித்தப்பா பெருமாள்சாமிக்கு 9 1/2 சென்ட், சீதாராமனுக்கு 9 சென்ட், கந்தசாமிக்கும் 9 சென்ட் ஆகும். தாவா சொத்து அமைந்துள்ள ஊரிலேயே யார் வசித்து வருகிறார் என்றால் சித்தப்பா பெருமாள்சாமி வசித்து வருகிறார். அவர் உள்ளூரிலேயே வசித்து வருவதனால் அவருக்கு மட்டும் அரை சென்ட் அதிகமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவர் விற்பனை செய்த அவரின் பாகத்தில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

2. அதேபோல் வழக்கு சொத்தில் 5ம் பிரதிவாதி கந்தசாமி, 6ம் பிரதிவாதி பெருமாள்சாமி பயிர் வைப்பதையோ அனுபவிப்பதையோ என்னாலும் தடுத்தது இல்லை என்றால் சரிதான். அதேபோல் அவர் விற்பனை செய்த சொத்தானது அவர் பாகத்தில் வந்த சொத்தை மட்டும்தான் விற்பனை செய்தார் என்றும் என்னுடைய பாகத்தையும் சேர்த்து விற்பனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் என்னுடைய பாகத்தையும் சேர்த்து விற்பனை செய்ததால்தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பாகமாக வந்த சொத்தினை விற்பனை செய்வதற்கு 5ம் பிரதிவாதி மற்றும் 6ம் பிரதிவாதி

ஏதாவது தடை செய்கிறார்களா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றும் அவர்களை அலைகழிக்கவேண்டும் என்பதால்தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

**மறுவிசாரணை**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கைரேகை செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.06 16:05:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு